6. அறிவிப்புகள்.

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1993-94, மொழிதல் (ஆ.செ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993-94 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

"In pursuance of Clause 2 of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I. Dr. M. Channa Reddy, Governor of Tamil Nadu, hereby give my recommendations to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for further grants for the financial year 1993—94."

7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1993—94, வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993—94 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கை மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993—94 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 28—3—1994 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1993-94 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக மொத்தமாக ரூ. 1107 கோடியே 46 லட்சத்து 11 ஆயிரத்துக்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

1994 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

<u>நிறைவேற்றப்பெற்ற 1993–94 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிகைகள்.</u>

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

A. <u>வருவாய்க் கணக்கில் செலவு.</u>

	கோரிக்கை.	(ரூபாய் ஆயிரத்தில்)
2	மாநில ஆயத் தீர்வைத் துறை	35,81
5	முத்திரைத் தாள்கள்-நிருவாகம் ..	95,95
7	மாநிலச் சட்ட மன்றம்	52,04
8	தேர்தல்கள்	117,69
9	மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள் ..	4,41,31
11	மாவட்ட நிருவாகம்	3
13	நீதி நிருவாகம்	2,37,62
14	சிறைச்சாலைகள்	2,29,13
15	காவல் துறை	22,30,00
16	தீயணைப்புப் பணிகள்	3,11,01
17	கல்வி	32,97,05
18	மருத்துவம்	10,76,74
19	பொதுச் சுகாதாரம்	2,89,17
20	வேளாண்மை	2,58,68,91

[1994 மார்ச் 30

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

	கோரிக்கை.	(ரூபாய் ஆயிரத்தில்)
21	மீனளம்	5,65,65
22	கால்நடை வளர்ப்பு	4,14,75
23	கூட்டுறவு	2,49,53
24	தொழில்கள்	1
25	கைத்தறியும் துணித் தொழிலும் ..	23,07,11
26	கதர்-கிராமத் தொழில்கள்	1,26,35
27	ஊரக வளர்ச்சி	49,89,34
29	சமூக நலன்	1
30	பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்	7,55,95
31	பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன்	1,29,29
32	வீட்டு வசதி	4,01,34
33	நகர்ப்பகுதி வளர்ச்சி	1
35	பாசனம்	1
36	பொதுப் பணிகள்-கட்டிடங்கள்	6,96,44
37	பொதுப் பணிகள்-பணியாளரமைப்பும் .. கருவிகளும், தளவாடமும்	2,74,49
39	சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்	56,25
40	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	1,31,85,23
42	பல்வகை	1

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி

கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)
44 காட்டுவளத் துறை	1,93,73
45 இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்	2,16,80
46 செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் ..	4,59,20
47 ஊரகத் தொழில்கள்	6,96,00
48 குடிநீர் வழங்கல்	1,04,55,60
49 நகராட்சி நிருவாகம்	7,19,62
50 சுற்றுலா	26,02
51 தமிழ் வளர்ச்சி பண்பாடு	81,53
மொத்தம்—A. வருவாய்க் கணக்கில் செலவு ..	7,12,82,73

B. வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு

52 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ..	1
53 தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு	4,56,89
54 பாசனம் குறித்த மூலதனச் செலவு ..	13,06,01
55 பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு	15,97,95
56 சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. —	6,69,16
58 காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு ..	1,81,77
59 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு	68,28
60 பல்வகை மூலதனச் செலவு	2,17,29,40
மொத்தம்—B வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு	2,58,09,47

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்

கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)
61 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்—	1,36,53,91
பெருமொத்தம்	11,07,46,11

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு. 1994 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்)

நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1994

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)